**செய்தி வெளியீடு எண்: 492** **நாள்: 13.07.2020**

# <u>செய்தி வெளியீடு</u>

## மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் இணைய வழி தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் நிகழ்ச்சிகள்

தமிழ்நாடு அரசின் அரசாணை எண்.6, தொ.ம.வே.(ஆர்)துறை, நாள்.18.01.2018–ன்படி ஜீலை 2–வது வாரமானது தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரமாக அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் கிண்டியில் இயங்கி வரும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையமும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகமும் இணைந்து 15.07.2020 பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து வேலைநாடும் இளைஞர்களும் பயன்பெறும் வண்ணம் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் ( Webinars ) மற்றும் போட்டிகள் (Online competition) இணைய வழி தொழில்நெறி கருத்தரங்குகள் (Webinars), சுய முன்னேற்ற உரைகள் மற்றும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, Talk show etc நடத்திட உள்ளன.

இளைஞர்களின் மேம்பாடே இந்தியாவின் வளர்ச்சி என்பதால், இளைஞர்கள் இந்நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் மற்றும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. V.விஷ்ணு, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**Scan the QR code to register for the above programmes**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**